3. அறிவிப்பு.

பேரவை விதிகள் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 256-ன் கீழ் 1987-88 ஆம் ஆண்டிற்கு பின்வரும் உறுப்பினர்களை பேரவை விதிகள் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன் :—

1. மாண்புமிகு முதல் அமைச்சர்
2. மாண்புமிகு பேரவை முன்னவர்
3. மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர்.
4. மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர்
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
6. மாண்புமிகு திரு. உ. சுப்பிரமணியன், எதிர்க்கட்சித் தலைவர்.
7. திரு. துரை கோவிந்தராசன், அரசு தலைமைக் கொறடா.
8. திரு. செ. செம்மலை
9. திரு. என். எஸ். வி. சித்தன்
10. திரு. டி. ஆர். வேங்கடரமணன்
11. திரு. மா. சின்னராசு
12. திரு. கி. மனோகரன்
13. திரு. கு. ரமணி
14. திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்
15. திரு. மா. சுந்தரதாஸ்
16. திரு. பொ. உத்திராபதி

பேரவை விதி 256-ன் கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.

4. தகவல் கோரல்.

(அ) குறைந்த விலையில் பம்பு செட்டுகளைத் தருவதாக ஒரு நிறுவனம் வெளியிட்டுள்ள விளம்பரம் குறித்து.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லிங்க் மார்க்கெட்டிங் சர்வீஸஸ் என்ற நிறுவனம் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் பம்ப் செட்டு களைத் தருவதாக விளம்பரம் செய்திருக்கிறது. 9—3—1987

அன்று தினமலர் மதுரைப் பதிப்பில் ரூபாய் 15,000 பெறுமானம் உள்ள பம்ப் செட்டை மூன்றாயிரம் ரூபாய்க்கு விற்பதாக விளம்பரம் வந்திருக்கிறது. அதற்கான விண்ணப்ப பாரம் ரூபாய் 500 கொடுத்து வாங்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது அரசினுடைய ஆதரவோடு நடக்கின்றதா? இதைப் பொறுத்தவரையில் மீதிப் பணத்தை வெளிநாட்டு நிறுவனங்கள் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது சரிதானா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விளம்பரத்தை நானும் பார்த்தேன். இது பற்றி இலாக்காவினிடத்திலே தகவல் கேட்டிருக்கிறேன். அந்த விவரத்தை விரைவில் அவைக்கு அறிவிக்கிறேன்.

(ஆ) மதுரை மாவட்டம் குடகனார்பட்டியில் மின்சாரத்திற்கு கூடுதல் சர்சார்ஜ் விதித்திருப்பது குறித்து.

திரு. வே. இரா. ஜெயராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டத்தைச் சேர்ந்த குடகனார்பட்டி என்ற கிராமத்தில் மின்சார வாரியத்தில் பழைய மின் கட்டண பாக்கிகளை ஒன் ப்ளஸ் ஒன் என்ற வீதத்தில் கட்டியிருக்கிறார்கள். அப்படி பழைய பாக்கியைக் கட்டிவிட்ட அனைத்து விவசாயிகளைப் பொறுத்தவரையிலும் அவர்கள் மேற்கொண்டும் கூடுதலாக சர்சார்ஜ் என்று கூறி பல்லாயிரக்கணக்கான ரூபாய் கட்ட வேண்டும் என்று சொல்லி நோட்டீஸ் விட்டிருக்கிறார்கள். இதை உடனடியாக நிறுத்தி வைக்கின்ற வகையில் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் இருக்கிறதா ? அல்லது வாரியத்திற்கு உடனடியாக அறிவுரை வழங்கி அதை நிறுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முற்படுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதனை எனது கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். சம்பந்தப்பட்ட மதுரை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களை இங்கே வரச் சொல்லியிருக்கிறேன். ஏற்கெனவே கட்டப்பட்டிருந்தால் மீண்டும் ஏன் கேட்கப்பட்டது என்று கேட்டு, தவறாக இருந்தால் அதை ரத்து செய்யவும், மேற்கொண்டு கட்டவேண்டிய கட்டணத்தை வசூலிக்காமல் இருப்பதற்கும் மின்துறை ஆணை பிறப்பிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.